DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
VANUR.

Calender - Crl.M.P.No.476/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for
Defence

Name : Lakshmanan

Father Name /
Husband Name : Rathinavel Goundar

Village : கோட்டக்கரை

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 07th July 2025.

சத்திய பிரமாண வாக்குமூலம்

1990ல் காளியம்மாள் என்பவர் எனக்கும் சீத்தாராமன் பத்மநாபன் ஆகியோருக்கு காலி மனை ஒன்றை தான்செட்டில்மெண்ட் மூலம் கொடுத்தார். மேற்சொன்ன காலி மனை சர்வே எண்.67/90 பச்சையப்பன் என்பவர் தனது தாயின் சொத்து என்றும், தனக்கு தான் சொந்தம் என்றும் வானூர் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார்.

மேற்சொன்ன வழக்கு விசாரணை முடிந்து எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. 1997ல் பச்சயைப்பன் மேற்படி வழக்கில் மேல்முறையிடு செய்தார். ஆனால் அந்த வழக்கை உடல்நலக்குறைவால் நடத்த முடியாமல் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கு சீராய்வு மனுதாக்கல் செய்திருந்தார்.

2018ம் வருடம் மேற்படி காலிமனைக்கு தன்னிடம் அசல் பத்திரம் இருப்பதாக என்மீது ஆரோவில் காவல் நிலையத்தில் பச்சயைப்பன் புகார் ஒன்றை கொடுத்தார். விசாரணைக்கு போலீசார் என்னை அழைத்தபோது தீர்ப்பு நகலை நான் காண்பித்தேன். தீர்ப்பு நகலை பார்த்துவிட்டு போலீசார் என்னை அனுப்பி விட்டனர்.

மீண்டும் விழுப்புரம் காவல் துணை காண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் ஒன்றை கொடுத்தார். அங்கும் நான் அந்த தீர்ப்பு நகலை காண்பித்தபோது நீதிமன்றத்திற்கு சென்று தீர்வு பெற்றுகொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். 2018ல் மீண்டும் பச்சயைப்பன் என்மீது வானூர் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். அதில் எனது தரப்பில் எதிலுறை தாக்கல் செய்தேன். அந்த வழக்கு எனக்கு ஆதரவாக தீர்ப்பானது. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

2021ம் ஆண்டு பச்சையப்பன் எங்களது தாய் எங்களுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்டை காட்டாமலும் வில்லங்கத்தில் இருந்து எங்களது பெயர்களை ரத்து செய்துவிட்டு மேற்படி காலிமனையை தனது பெயருக்கு பதிவு செய்து கொண்டார்.

2025 மே மாதத்தில் முந்திரி தோப்பிற்கு சென்றபோது ஆரோவில பவுண்டேஷனை சேர்ந்தவர்கள் அந்த நிலம் தங்களுக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டது என்றும் அதனால் தங்களுக்கு உரிமையானது என்றும சொன்னார்கள். உடனே மே மாதத்திலேயே ஆரோவில காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் ஒன்றை கொடுத்தேன். அதற்கு போலீசார் இது சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்.

உடனே விழுப்புரம் காவல் துணை காண்காணிப்பாளர் அலுவலகம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகாரை குற்றப்பிரிவுக்கு மாற்றம் செய்தார்கள். குற்றப்பிரிவில் என்னை அழைத்து விசாரித்தார்கள். விசாரணைக்கு எதிர்தரப்பினர் வராததால் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்.

எனவே இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எதிரி பச்சயைப்பன் ஆவணங்களை மோசடியாக தயார்செய்து மேற்சொன்ன மனையை மூன்றாம் தரப்பினருக்கு விற்று விட்டதால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/- (XXXX)
நீதித்துறை நடுவர்,
வானூர்.